Automatic Dimmer in Lorries

* 7 *Q.*—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that a large number of accidents are caused by Lorries due to non-dimming of head-lights during night times; and

(*b*) if so, whether there is any proposal with the Government to enforce upon the Lorry-Owners to have an Automatic Dimmer?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) தானியங்கி விளக்கணைக்கும் கருவியைப் பொருத்துவதைக் கட்டாயமாக்கவேண்டும் என்ற யோசனை பரிசிலனைக்குப் பின் கைவிடப் பட்டது.

திரு. ம. சங்கரலிங்கம்: விபத்துக்களுக்குக் காரணமாக இருக்கிற விளக்கு களின் ஒளியைத் தானியங்கி ஒளிக்குறைப்பான் முறையைப் பயன்படுத்தி ஒளியைக் குறைப்பது சிறப்புடையது என்று முதலில் கருதி விட்டு, இப் போது ஏன் அது தற்காலிகமாக நிறுத்தப்பட்டது என்று நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: முதலாவதாக, தேவையான அளவுக்கு இன்னும் அவை உற்பத்தி செய்யப்படவில்லை. அதுமட்டுமல்லாமல், இவை சிறப்பாக, நல்லமுறையில் இயங்குகின்றனவா என்று இன்னும் தீவிரமாகப் பரிசிலனை செய்து பார்க்க வேண்டியிருக்கிறது. சரியாகத்தான் இயங்கு கின்றன என்று நம்பி வண்டிகள் போய், சரியாக இயங்காமல் போகும் நிலை ஏற்பட்டால், இப்போது ஏற்படுவதை விட இன்னும் அதிகமாக விபத்து ஏற் பட வாய்ப்பு ஏற்படும். தானாக இயங்கும் என்று உறுதியாகக் கண்டு பிடிக்கப்பட்ட பிறகு, அதன் அடிப்படையில் பரவலாக அமுல்படுத்தலாம் என்கிற எண்ணத்தில்தான் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிறோம்.

Thiru J. M. MIAKHAN: Sir, in some countries, the light that comes from the headlights of motor vehicles is polarised and the light travels on parallel lines and the light does not hit the eyes of the drivers of the on-coming vehicles. For example, in France and other countries, there is a mandaory rule that they have to fit their vehicles with this kind of polarised lights. If this is installed

1984 பிப்ரவரி 17]

in every vehicle, there is no necessity to have a dimmer and the eyes of the drivers will not be hit directly and there will not be more number of accidents. Will the Hon. Minister consider the suggestion ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அதனால்தான் விளக்குகளின் மத்தியில் ஒரு கறுப்புப் புள்ளி வைக்க வேண்டுமென்ற ஒரு முறையை வைத்திருக்கிறோம். அதிலும் சிரமம் இருக்கிறது என்பதால்தான் புதிய கண்டுபிடிப்பு கண்டுபிடிக்கப்பட்டது. புதிய கண்டுபிடிப்பு வெற்றிகரமாக வரும் என்று நாம் நினைத்தால் கூட, அதுபற்றி தேவையான அளவுக்கு ஆராய்ச்சி செய்து முழு வெற்றி பெற முடியும் என்று நிரூபிக்கும்வரை செயல்படுத்துவதுபற்றி தயக்கம் காட்டிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினரின் யோசனையும் நல்ல யோசனைதான்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : விளக்குகளின் நடுவில் கறுப்புப்புள்ளி அடிப்பதைக் கட்டாயப்படுத்தி அதன் மூலம் விளக்குகளின் வெளிச்சத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் இரவு நேரத்தில் வாகனங்களில் செல்வதற்குப் பயமாக இருக்கிறது. விளக்கை அணைப்பது, குடித்துக் கொண்டு ஓட்டுவது, வேகமாக ஓட்டுவது போன்றவற்றை தக்கமுறையில் கண் காணித்து அதன்மூலம் விபத்துக்களைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட மூன்று காரியங்கள் குறித்தும் நடவடிக்கை எடுக்க அரசுக்கு உரிமை உண்டு. இப்போதே இவை குறித்து நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். விளக்கின் நடுவில் கறுப்புப்புள்ளி அடிக்க வேண்டுமென்று இப்போதே கட்டாயப்படுத்தி நடைமுறைப்படுத்திக்கொண்டுதான் இருக்கிறோம். அதுபோல் குடித்துவிட்டு வாகனங்களை ஓட்டுகிறவர்கள் மீதும், வேகமாக ஓட்டுகிறவர்கள் மீதும் நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட மாதிரி குற்றங்களைச் செய்பவர்கள் மீது ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Thirumathi TARA CHERIAN: Hon. Chairman, could I add some more information to what was stated by the hon. Member Dr. Janarthanam ? There is no point in saying that action is being taken. The Police could at least enforce the putting of 'cat 's eye' in the lights of all the motor vehicles. When the vehicles are being

driven without such change in lights, it is very, very dangerous. Will the Hon. Minister give an assurance on the floor of the House that it will be compulsorily done by the Police Department ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : போக்குவரத்துத் துறையும காவல் துறையும் ஏற்கெனவே அதைச் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். அதைக் கட்டாயப்படுத்த வேண்டுமென்று இங்கே சொன்னார்கள். ஏற்கெனவே கட்டாயமாகச் செய்ய வேண்டுமென்று சொல்லி அது சம்பந்தமாக நடவடிக் கையையும் மேற்கொண்டிருக்கிறார்கள்.

திரு. சி. இராமலிங்கம் : குஜராத் மாநிலத்தில் ஹைவேஸ் மூலம் காவல் துறையினர் இரவு நேரங்களில் ரோந்து அடிக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ரோந்து வருகிறார்கள் அல்லது ரோந்து சுற்றுகிறார்கள் என்று சொல்லுங்கள். (சிரிப்பு)

திரு. சி. இராமலிங்கம் : ரோந்து வருகிறார்கள். அப்படி வருகிற நேரத் தில் எங்காவது விபத்து ஏற்படுகிற நேரத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். அதுபோல் வேகமாகச் செல்லும் வாகனங்களைக் கட்டுப்பத்துகிறார்கள். தேவையான உதவி செய்கிறார்கள். சாலைகளில் ஏற்படுகின்ற ஆக்கிரமிப்புகளை அகற்றுகிறார்கள். இதற்காக ஹைவேஸ் போலீஸ் என்று தனியாக அமைத்துச் செயல்படுறார்கள். அதுபோல் நம்முடைய மாநிலத்திலும் ஏற்பாடு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ? அந்த வகையில் இரவு நேரங்களில் அதிகமாக ஏற்படுகின்ற விபத்துக்களைத் தடுக்க ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஏற்கெனவே போக்குவரத்துத் துறை யினரும், காவல் துறையினரும் இருக்கிறார்கள். அவர்கள்தான் இங்கே போக்குவரத்து வசதிகளை ரெகுலேட் (regulate) செய்துகொண்டி ருக்கிறார்கள். நெடுஞ்சாலையில் வைக்க அரசாங்கம் முயற்சிகளை எடுத்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது.